www.Padasalai.Net www.TrbTnpsc.com

B

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு (வேலூர் மாவட்டம்)

நேரம் : 3.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள் : 100

பகுதி -1

15×1=15

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:-**

1) எந்தமிழ்நா என்பதை பிரித்தால் இவ்வாறு வரும்
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

2) சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

3) "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்று குறிப்பிடும் நூல்
அ) திருக்குறள் ஆ) கொன்றைவேந்தன் இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

4) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் யாது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

5) மேன்மை தரும் அறம் என்பது ________
அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்று அறம் செய்வது
இ) புகழ் கருவி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

6) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்துவது
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

7) இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடி போடுவதன் காரணம் ________
அ) நாட்டை கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

8) வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

9) "ஆலும் வேலும் பல்லுக்குறுதி: நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" இத்தொடர் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் குறிப்பிடுக.
அ) ஆலமரம், வேலமரம் - ச, உ ஆ) ஆலமரம், வேப்பமரம் - ரு, க
இ) அரசமரம், வேங்கை மரம் - க, உ ஈ) வேப்பமரம், ஆலமரம் - ச, சு

10) உணவு தொடர்பான பழமொழியைத் தேர்ந்தெடுக்க
அ) ஆடிப்பெருங்காற்றில் அம்மியும் நகரும் ஆ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
இ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும் ஈ) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

11) குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

"பகர்வணர் திரிதருநகரவீதியும்:
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்:
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்

12) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் யாது?
அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம் இ) தேவாரம் ஈ) மெய்க்கீர்த்தி

13) இப்பாடலை இயற்றியவர் யார்?
அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) திருவள்ளுவர் ஈ) சேக்கிழார்

14) காருகர் என்பதன் பொருள்
அ) எண்ணெய் வணிகர் ஆ) துணி நெய்பவர் இ) உப்பு வணிகர் ஈ) சிற்பி

15) நுண்வினை - இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) பண்புத்தொகை

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - 2 (மதிப்பெண்கள் :18)

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:-
(21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க) 4×2=8

16) விடைகளுக்கேற்ற வினாத்தொடர் அமைக்க
 அ) இலா என்பது பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் ஆகும்.
 ஆ) தமிழர் பண்டைய நாட்களிலிருந்தே அறிவியலை வாழ்வியலோடு இணைத்துக்கொள்ளும் இயல்புடையவர்கள்.

17) வசன கவிதை - குறிப்பு வரைக.

18) "நச்சப்படாதவன் செல்வம் குறித்து வள்ளுவர் கூறுவது யாது?"

19) திரைப்படமாக எடுக்கப்பட்ட ஜெயகாந்தன் படைப்புகள் யாவை?

20) வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

21) 'அருமை' எனத்தொடங்கும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு - 2

ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:- 5×2=10

22) தணிந்தது - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

23) கலைச்சொல் தருக. அ) IRRIGATION ஆ) COSMIC RAYS

24) புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக

25) நிறுத்தக்குறியிடுக:

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக்காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினை வூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி.

26) இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைக்க: அ. மலை-மாலை ஆ. கலை-காலை

27) அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தது. அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. வழுவை, வழாநிலையாக மாற்றுக.

28) ஐய வினாவைச் சான்றுடன் விளக்குக.

பகுதி -3 (மதிப்பெண்கள் :18)

பிரிவு - 1

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:- 2×3=6

29) புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.
 - இது போல் இளம்பயிர்வகை மூன்றன் பெயர்களை எழுதி அவற்றைத் தொடரில் அமைக்க

30) பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், "நீடு துயில் நீக்கப்பாடி வந்த நிலா", 'சிந்துக்குத் தந்தை' என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர்: எட்டயபுர ஏந்தலாக அறியப்பட்டவர்: கவிஞர்: கட்டுரையாளர்: கேலிச்சித்திரம் - கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்: சிறுகதை ஆசிரியர்: இதழாளர்: சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், பெண்ணடிமைத்தனத்தையும் தன் பாடல்களில் எதிர்த்து எழுதியவர்: குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்களையும் கண்ணன் பாட்டையும் பாப்பாபாட்டு, புதிய ஆத்திச்சூடி என குழந்தைகளுக்கான நீதிகளையும் பாடல்களில் தந்தவர்: இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர். பாட்டுக்கொரு புலவன் எனப்பாராட்டப்பட்டவர் பாரதியார்.

1) பாட்டுக்கொரு புலவன் எனப்பாராட்டப்பட்டவர் யார்?
2) பாரதியார் பணியாற்றிய இதழ்கள் யாவை?
3) இப்பத்திக்குப் பொருந்திய தலைப்பொன்று தருக.

31) "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்"- கூற்றினை விளக்குக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

பிரிவு - 2

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:- 2×3=6

(34-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க)

32) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணமாகப் பாவலரேறு கூறுவன யாவை?

33) எவையெல்லாம் அறியேன் எனக் கருணையன் கூறுகிறார்?

34) அ) "அன்னை மொழியே" - எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடலை அடிமாறாமல் எழுதுக. (அல்லது)

ஆ) "நவமணி" - எனத்தொடங்கும் தேம்பாவணிப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு - 3

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:- 2×3=6

35) 'கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!

- இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக

36) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

- இக்குறட்பாவில் பயின்று வந்த அணியைச் சுட்டி விளக்குக

37) அலகிட்டு வாய்பாடு எழுதுக.

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.

பகுதி - 4 (மதிப்பெண்கள் :25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 5×5=25


38) அ) சிலப்பதிகாரம் மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. (அல்லது)

ஆ) முல்லைப்பாட்டு உணர்த்தும் கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39) அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தம்பிக்குத் திறன்பேசி பயன்பாடு குறித்த அறிவுரைகளைக் கூறிக் கடிதம் எழுதுக.

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) திருச்சி மாவட்டம், முகில்நகர், மறையோன் வீதி, 45ஆம் இலக்க வீட்டில், திருவானைக்காவல் நகரில் குடியிருக்கும் கிள்ளி வளவன் மகன் தமிழ்வேந்தன் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். அவர் அதே பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை தமிழ்வேந்தனாகக் கருதி கொடுக்கப்பட்ட சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42) அ) பள்ளியிலும் வீட்டிலும் உனது அன்றாடச் செயல்களைப் பட்டியலிடுக. **(அல்லது)**

ஆ) மொழிபெயர்க்க

- The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி -5 (மதிப்பெண்கள் :24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:-** **3×8=24**

43) அ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை விவரித்து எழுது. **(அல்லது)**

ஆ) கொடை தமிழரின் சிறந்த அறங்களுள் ஒன்று என்பதை உமது பாடத்தின் வழி நிறுவுக.

44) அ) அ.அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" என்னும் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக. **(அல்லது)**

ஆ) "கோபல்லபுரத்து மக்கள்" கதையில் உங்கள் மனம் கவர்ந்த கதாபாத்திரத்தைப் பற்றி விவரித்து எழுதுக.

45) அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

- முன்னுரை - அரசுப்பொருட்காட்சி - அரங்குகள் - துறை விளக்கங்கள் - விற்பனை நிலையங்கள் - விளையாட்டு நிகழ்வுகள் - இலக்கியக் கூட்டங்கள் - மகிழ்ச்சி - முடிவுரை

**(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிமுறைகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வைத் தருவோம் - முடிவுரை

****/****

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

## மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பம்

**சேர்க்கை எண் :**

**நாள் :** **வகுப்பும் பிரிவும் :**

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியின் கையெழுத்து

www.Padasalai.Net

(குறிப்பு : வேலூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு ஒரே வினாத்தாள்)

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## அரசினர் மேல் நிலைப் பள்ளி, சோழவரம் - வேலூர்

**நேரம் :** 3:00 மணி **பத்தாம் வகுப்பு - தமிழ்** **மதிப்பெண்கள்** : 100

*பகுதி - 1*

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:-** **15×1=15**

1) **எந்தமிழ்நா என்பதை பிரித்தால் இவ்வாறு வரும்**
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
**இ) எம் + தமிழ் + நா** ஈ) எந்தம் + தமிழ் + நா

2) **சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாவினம்**
**அ) அகவற்பா** ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**3)** *"மருந்தே ஆயினும் விருந்தொடு உண்"* **என்று குறிப்பிடும் நூல்**
அ) திருக்குறள் **ஆ) கொன்றைவேந்தன்** இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

4) **பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் யாது?**
அ) துலா ஆ) சீலா இ) குலா **ஈ) இலா**

5) **மேன்மை தரும் அறம் என்பது ____ .**
**அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது**
ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்று அறம் செய்வது
இ) புகழ் கருவி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

6) **அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்துவது**
**அ) வேற்றுமை உருபு** ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

7) **இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடி போடுவதன் காரணம் ____ .**
அ) நாட்டை கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
**இ) வலிமையை நிலைநாட்டல்** ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**8) "*வாய்மையே மழைநீராகி*" -இத்தொடரில் வெளிப்படும் அணி**
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் **இ) உருவகம்** ஈ) தீவகம்

**9)** *"ஆலும் வேலும் பல்லுக்குறுதி: நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"* **இத்தொடர் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் குறிப்பிடுக.**
**அ) ஆலமரம், வேலமரம் - ச, உ** ஆ) ஆலமரம், வேப்பமரம் - ரு, க
இ) அரசமரம், வேங்கை மரம் - க, உ ஈ) வேப்பமரம், ஆலமரம் - ச, சு

10) **உணவு தொடர்பான பழமொழியைத் தேர்ந்தெடுக்க**
அ) ஆடிப்பெருங்காற்றில் அம்மியும் நகரும்
ஆ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
இ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
**ஈ) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு**

11) **குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்**
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
**இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்** ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

*"பகர்வணர் திரிதருநகரவீதியும்;*
*பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;*
*தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"*

12) **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் யாது?**

அரசினர் மேல் நிலைப் பள்ளி, சோழவரம் - வேலூர்
www.Padasalai.Net

**அ) சிலப்பதிகாரம்** ஆ) கம்பராமாயணம் இ) தேவாரம் ஈ) மெய்க்கீர்த்தி

13) **இப்பாடலை இயற்றியவர் யார்**?
**அ) இளங்கோவடிகள்** ஆ) கம்பர் இ) திருவள்ளுவர் ஈ) சேக்கிழார்

14) **காருகர் என்பதன் பொருள்**
அ) எண்ணெய் வணிகர் **ஆ) துணி நெய்பவர்** இ) உப்பு வணிகர் ஈ) சிற்பி

15) **நுண்வினை - இலக்கணக் குறிப்பு**
அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) உவமைத்தொகை **ஈ) பண்புத்தொகை**

*பகுதி -2 (மதிப்பெணகள் :18)*

*பிரிவு - 1*

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:-**
*(21**ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க**)* **4×2=8**

16) **விடைகளுக்கேற்ற வினாத்தொடர் அமைக்க.**
**அ) இலா என்பது பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் ஆகும்.**
*பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?*

**ஆ) தமிழர் பண்டைய நாட்களிலிருந்தே அறிவியலை வாழ்வியலோடு இணைத்துக்கொள்ளும் இயல்புடையவர்கள்.**
*யார் பண்டைய நாட்களிலிருந்தே அறிவியலை வாழ்வியலோடு இணைத்துக்கொள்ளும் இயல்புடையவர்கள் ?*

**17) வசன கவிதை - குறிப்பு வரைக.**
உரைநடையும்,கவிதையும் இணைந்து யாப்பு கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை.

**18) "நச்சப்படாதவன் செல்வம் குறித்து வள்ளுவா கூறுவது யாது?"**
பிறருக்கு உதவாதவரின் செல்வம் நச்சு மரம் பழுத்ததைப் போன்றது.

**19) திரைப்படமாக எடுக்கப்பட்ட ஜெயகாந்தன் படைப்புகள் யாவை?**
சில நேரங்களில் சில மனிதர்கள், உன்னைப்போல் ஒருவன், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், ஊருக்கு நூறு பேர்.

**20) வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.**
i) பழைய புத்தக கடையில் புத்தகம் வாங்குதல்.
ii) உணவுக்கான பணத்தில் புத்தகம் வாங்குதல்.

**21) 'அருமை' எனத்தொடங்கும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.**

*அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்*
*பெருமை முயற்சி தரும்.*

*பிரிவு -2*

**ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:-** **5×2=10**

**22) தணிந்தது - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**தணிந்தது** - தணி+த்(ந்)+த்+அ+து
**தணி** - பகுதி,
**த்** - சந்தி
**த்(ந்)** - ந் ஆனது விகாரம்
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - சாரியை,
**து** - படர்க்கை வினைமுற்று விகுதி

**23) கலைச்சொல் தருக.**
அ) IRRIGATION - **பாசனம்**
ஆ) COSMIC RAYS - **விண்வெளிக் கதிர்கள்**

**24) புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக**
i) வெட்சி - கரந்தை
ii) வஞ்சி - காஞ்சி
iii) நொச்சி - உழிஞை

ஆர்.இராஜ்குமார் மேல்நிலைப்பள்ளி,சோளிங்கர்-வேலூர்
www.Padasalai.Net

**25) நிறுத்தக்குறியிடுக.**

**பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக்காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி**

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். -ம.பொ.சி

**26) இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைக்க:**

**அ. மலை-மாலை** :

*மலை* மீது ஏற *மாலை* நேரம் சிறந்தது.

**ஆ. கலை-காலை** :

சிலம்பாட்ட *கலையை* மாணவர்கள் *காலை* வேளையில் பயிற்சி செய்தனர்.

**27) *அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தது.***

***அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பியது.***

**- வழுவை, வழாநிலையாக மாற்றுக.**

அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தார். அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பினார்.

**28) ஐய வினாவைச் சான்றுடன் விளக்குக.**

ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கும் வினா ஐய வினா ஆகும்.

(**எ-டு**) *அங்கே நிற்பது எருதா? பசுவா?*

*பகுதி -3 (மதிப்பெண்கள் :18)*

*பிரிவு- 1*

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:-** **2×3=6**

**29) *புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.***

**-இது போல் இளம்பயிர்வகை மூன்றன் பெயர்களை எழுதி அவற்றைத் தொடரில் அமைக்க.**

i) காட்டில் பனைவடலி நடப்பட்டது.

ii) தோட்டத்தில் மாங்கன்று நடப்பட்டது.

iii) சோளப் பைங்கூழ் வளர்ந்து வருகிறது.

iv) புளியங்கன்று சாலை ஓரத்தில் வளர்ந்து வருகிறது.

V) தோட்டத்தில் தென்னம்பிள்ளை வளர்த்தேன்.

30) **பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், "நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா" , 'சிந்துக்குத் தந்தை' என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர்; எட்டயபுர ஏந்தலாக அறியப்பட்டவர்; கவிஞர்; கட்டுரையாளர்; கேலிச்சித்திரம் - கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்; சிறுகதை ஆசிரியர்; இதழாளர்; சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், பெண்ணடிமைத்தனத்தையும் தன் பாடல்களில் எதிர்த்து எழுதியவர்; குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்களையும் கண்ணன் பாட்டையும் பாப்பா பாட்டு, புதிய ஆத்திச்சூடி என, குழந்தைகளுக்கான நீதிகளையும் பாடல்களில் தந்தவர்; இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர். பாட்டுக்கொரு புலவன் எனப் பாராட்டப்பட்டவர் பாரதியார்;

1) **பாட்டுக்கொரு புலவன் எனப்பாராட்டப்பட்டவர் யார்**?

*பாரதியார்*

2) **பாரதியார் பணியாற்றிய இதழ்கள் யாவை**?

*இந்தியா, சுதேசமித்திரன்.*

3) **இப்பத்திக்குப் பொருந்திய தலைப்பொன்று தருக.**

*பாரதியார்*

*31) "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்"* **கூற்றினை விளக்குக.**

*திருப்பதி, திருத்தணி*

**விளக்கம்**: மொழிவாரி மாநிலம் பிரிக்கப்படும்போது, திருப்பதி தமிழகத்துக் கிடைக்காததால் ம.பொ.சி அவர்கள் "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" என்று முழங்கினார்.

*பிரிவு - 2*

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:-**

(34-**ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க**) 2x3=6

**32) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணமாகப் பாவலரேறு கூறுவன யாவை?**

அரசினர் மேல்நிலைப் பள்ளி, சோழவரம் - வேலூர்
www.Padasalai.Net

i) அன்னை மொழியானவள்
ii) அழகான செந்தமிழானவள்
iii) பழமைக்கு பழமையாய் தோன்றிய நறுங்கனி
iv) பாண்டியன் மகள்
v) திருக்குறளின் பெருமைக்கு உரியவள்
vi) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்கணக்கு, ஐம்பெரும் காப்பியங்களையும் கொண்டவள்.

**33) எவையெல்லாம் அறியேன் எனக் கருணையன் கூறுகிறார்** ?
i) உயிர் பிழைக்கும் வழி
ii) உடலின் தன்மை
iii) உணவை தேடும் வழி
iv) காட்டில் செல்லும் வழி

**34) அ)** ***"அன்னை மொழியே"*** **- எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடலை அடிமாறாமல் எழுதுக (அல்லது)**

*"அன்னை மொழியே ! அழகார்ந்த செந்தமிழே !*
*முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே !*
*கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்*
*மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே !*

*தென்னன் மகளே ! திருக்குறளின் மாண்புகழே !*
*இன்னறும் பாப்பத்தே ! எண்தொகையே ! நற்கணக்கே !*
*மன்னுஞ் சிலம்பே ! மணிமே கலைவடிவே !*
*முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே !*
- பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

**ஆ)** ***"நவமணி"*** **- எனத்தொடங்கும் தேம்பாவணிப் பாடலை அடிமாறாமல் எழுதுக.**

*"நவமணி வடக்க யில்போல்*
*நல்லறப் படலைப் பூட்டும்*
*தவமணி மார்பன் சொன்ன*
*தன்னிசைக்கு இசைகள் பாடத்*
*துவமணி மரங்கள் தோறும்*
*துணர் அணிச் சுனைகள் தோறும்*
*உவமணி கானம்கொல் என்று*
*ஒலித்து அழுவ போன்றே."*
- வீரமாமுனிவர்.

*பிரிவு - 3*

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:-** **2×3=6**

**35)** ***'கண்ணே கண்ணுறங்கு !***
***காலையில் நீயெழும்பு !***
***மாமழை பெய்கையிலே***
***மாமழவே கண்ணுறங்கு !***
***பாடினேன் தாலாட்டு !***
***ஆடி ஆடி ஓய்ந்துறங்கு !***
**- இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**

i) *கண்ணே கண்ணுறங்கு* - **விளித்தொடர்.**
ii) *மாமழை* - **உரிச்சொல் தொடர்.**
iii) *மாம்பூவே* - **விளித்தொடர்.**
iv) *பாடினேன் தாலாட்டு* - **வினைமுற்றுத் தொடர்.**
v) *ஆடி ஆடி* - **அடுக்குத் தொடர்.**

**36)** ***அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை***
***பண்பும் பயனும் அது.***
**- இக்குறட்பாவில் பயின்று வந்த அணியைச் சுட்டி விளக்குக.**

**அணி**: நிரல் நிறை அணி. (***நிரல்*** *= வரிசை.* ***நிறை*** *= நிறுத்துதல்.)*
சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்திப் பொருள் கொள்வது.
**எ.கா**: *அன்புக்கு அறன், பண்புக்கு பயன்.*

அரசினர் மேல்நிலைப் பள்ளி, சோழவரம் - வேலூர் www.Padasalai.Net

37) **அலகிட்டு வாய்பாடு எழுதுக.**

*தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே*
*வேளாண்மை என்னும் செருக்கு.*

1. தா / ளாண் / மை = *நேர் + நேர் + நேர்* = **தேமாங்காய்**
2. என் / னும் = *நேர் + நேர்* = **தேமா**
3. தகை / மைக் / கண் = *நிரை + நேர் + நேர்* = **புளிமாங்காய்**
4. தங் / கிற் / றே = *நேர் + நேர் + நேர்* = **தேமாங்காய்**
5. வே / ளாண் / மை = *நேர் + நேர் + நேர்* = **தேமாங்காய்**
6. என் / னும் = *நேர் + நேர்* = **தேமா**
7. செருக் / கு. = *நிறைபு* = **பிறப்பு.**

*பகுதி -4 (மதிப்பெண்கள் :25)*

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** **5×5=25**

38) **அ) சிலப்பதிகாரம் மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.**

**மருவூர்ப்பாக்க வணிக வீதி :**

1.தானியக் கடைத் தெருக்கள்
2.நேரடி வணிகம்
3.இலாப நோக்கமற்றது
4.கலப்படம் இல்லாதது
5.தரம் உண்டு, விலை குறைவு
6.கைத்தொழில் வல்லுநர்களான நெசவாளர்களை கொண்ட வணிக வீதி.
7. எட்டு வகைத் தானியங்கள் கூலக்கடைத் தெருவில் உள்ளன.
8. தையற்காரர், தச்சர், தோல் பொருள் செய்பவர், பொம்மைகள் செய்பவர் என பலரும் இருந்தனர்.
9. முத்தும் மணியும் பொன்னும் அளக்க முடியாத அளவு இருந்தன.

**இக்கால வணிக வளாகங்கள் :**

1. தனித்தனி அங்காடிகள்
2. இடைத் தரகர்கள் அதிகம்
3. இலாபம் மட்டுமே முக்கியம்
4. கலப்படம் கலந்துள்ளது
5. விலை அதிகம்
6. கைத்தறி ஆடைகளை விட விசைத்தறி ஆடைகளே அதிகம். நவீன ஆடையகங்கள் காண முடிகிறது.
7. எல்லாவிதப் பொருள்களும் ஒரே இடத்தில் வாங்கும் பல்பொருள் அங்காடி உள்ளன.
8. நவீன சாதனங்களை விற்பவர்கள் மற்றும் பழுது நீக்குபவர்கள் போன்றோர் உள்ளனர்.
9. குளிரூட்டப்பட்ட வணிக வளாகங்கள்.

38) **ஆ) முல்லைப்பாட்டு உணர்த்தும் கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.**

**குறிப்புச் சட்டம்**
முன்னுரை
மழை மேகம்
மழைப் பொழிவு
மாலைப் பொழுது
நற்சொல் கேட்டல்
ஆற்றுப்படுத்துதல்
முடிவுரை

**முன்னுரை :**
முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை நாம் கட்டுரை வடிவில் காணலாம்.

**மழை மேகம் :**
திருமால் மாவலி மன்னனுக்கு நீர் வார்த்து தரும் போது விண்ணுக்கும் மண்ணுக்கும் பேருருவம் எடுத்தது போல் மழை மேகம் உயர்ந்து நின்றது.

**மழைப் பொழிவு :**
கடலின் குளிர் நீரைப் பருகி, மலையைச் சூழ்ந்து விரைந்த வேகமாய் பெருமழைப் பொழிகிறது.

**மாலைப் பொழுது :**

அரசினர் மேல்நிலைப் பள்ளி, சோழவரம் - வேலூர்
www.Padasalai.Net

- ✓ வண்டுகளின் ஆரவாரம் கொண்ட அரும்புகள்.
- ✓ முதுப் பெண்கள் மாலை வேலையில் முல்லைப் பூக்களோடு, நெல்லையும் தெய்வத்தின் முன் தூவினர்.

**நற்சொல் கேட்டல்** :

- ✓ முதுப்பெண்கள் தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.
- ✓ இது விரிச்சி என அழைக்கப்படும்.

**ஆற்றுப்படுத்துதல்** :

இடைமகள் பசியால் வாடிய இளங்கன்றை காணல். உன் தாய்மாரை எம் இடையர் இப்போது வந்து விடுவர் எனக் கூறல். முதுப் பெண்கள் இந்த நற்சொல்லை நாங்கள் கேட்டோம். உன் தலைவன் வந்து விரைந்து வந்துவிடுவான் என ஆற்றுப்படுத்தினர்.

**முடிவுரை** :

இவ்வாறு முல்லைப் பாட்டில் மழைமேகம், மழைப்பொழிவு, மாலைப் பொழுது, நற்சொல் கேட்டல், ஆற்றுப்படுத்துதல் என செய்திகளை கண்டோம்.

39) **அ**) **<u>உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக</u>**. (**அல்லது**)

அனுப்புநர்
கு. அமரன்,
28, முருகன் கோவில் தெரு,
சோழவரம்,
வேலூர் - 632 113.

பெறுநர்
மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
வேலூர் - 632 001.

ஐயா,

**பொருள் :** *மின்விளக்கு சரி செய்ய வேண்டுதல் - சார்பு.*

வணக்கம். எங்கள் தெருவில் 100 குடும்பங்கள் உள்ளன. எங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன. எனவே பழுதடைந்த மின்விளக்குகளை சரி செய்து கொடுக்க வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

இடம் : வேலூர் இப்படிக்கு,
நாள் : 13-12-2023 தங்கள் உண்மையுள்ள,
கு. அமரன்.

39) **ஆ**) **<u>புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தம்பிக்குத் திறன்பேசி பயன்பாடு குறித்த அறிவுரைகளைக் கூறிக் கடிதம் எழுதுக.</u>**

வேலூர்,
13 - 12 - 2023.

அன்புள்ள தம்பிக்கு,

நலம். நலம் அறிய ஆவல்.

நீ புதிதாகத் திறன்பேசி வாங்கியுள்ளாய் என்பதைக் கேட்டு மகிழ்ந்தேன். இனிமேல் உலகமே உன் விரல் நுனியில், எந்த துறையைச் சார்ந்த செய்தியாக இருந்தாலும் அத்தனையும் உடனே அறியமுடியும்.

பல்வேறு பயனுள்ளவைகள் கொட்டிக் கிடந்தாலும் பாழும் கிணற்றில் விழவும் வாய்ப்புள்ளது. முகநூல், புலனம், படவரி போன்றவற்றைப் பயன்படுத்தும்போது மிகக் கவனம் தேவை. உன் திறன் பேசியிலேயே உன் பொழுதை எல்லாம் கழித்துவிடாதே.

உன் முகவரியையோ, அலைபேசி எண்ணையோ, புகைப்படத்தையோ பகிரக் கூடாது. உன் கல்விக்கும், அறிவுக்கும், தனித்திறமைக்கும் பயனுள்ள வகையில் திறன்பேசியுடனான உறவை அமைத்துக்கொள். இனிய வாழ்த்துகள்!

இப்படிக்கு,
அன்பு அண்ணன்,
க.அறிவழகன்.

**<u>உறைமேல் முகவரி</u>** :

பெறுநர்

அரசினர் மேல் நிலைப்பள்ளி, சோழவரம், வேலூர் www.Padasalai.Net

க. முருகன்,
த/பெ. ச. கதிரவன்,
25, முத்துகடை,
இராணிப்பேட்டை - 632 401.

40) **<u>காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.</u>**

*"உள்ளத்தை விதையாக்கு*
*உறுபசியில் நெல்லாக்கு*
*அன்னத்தை உலகிற்கு*
*அள்ளித்தினம் தந்து*
*இல்லத்தில் களிப்பூட்டி*
*இன்பத்தை நமக்களித்து*
*காலமெல்லாம் கரைந்திடும்*
*மெழுகெனவே*
*கால்வயிற்றுப் பசியோடு*
*கனியுழவன் வாழ்வதுவே...';*

41) **திருச்சி மாவட்டம், முகில்நகர், மறையோன் வீதி, 45ஆம் இலக்க வீட்டில், திருவானைக்காவல் நகரில் குடியிருக்கும் கிள்ளி வளவன் மகன் தமிழ்வேந்தன் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். அவர் அதே பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார்.தேர்வர் தன்னை தமிழ்வேந்தனாகக் கருதி கொடுக்கப்பட்ட சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.**

42) **அ) <u>பள்ளியிலும் வீட்டிலும் உனது அன்றாடச் செயல்களைப் பட்டியலிடுக.</u> (அல்லது)**

**<u>பள்ளியில் நான் :</u>**
1. நேரத்தைச் சரியாகக் கடைபிடிப்பேன்
2. ஆசிரியர் சொல்படி நடப்பேன்..
3. ஆசிரியரிடம் பணிவுடன் நடந்துக்கொள்வேன்.
4. நண்பர்களுடன் கலந்து உரையாடுவேன்.
5. நண்பர்களுக்கு உதவிகள் செய்வேன்.

**<u>வீட்டில் நான் :</u>**
1. அதிகாலையில் எழுதல்.
2. பெற்றோர் சொல்படி நடப்பேன்.
3. பெரியவர்களிடம் பணிவுடன் நடந்துக்கொள்வேன்.
4.உறவினர்களுடன் கலந்து உரையாடுவேன்.
5.பெற்றோருக்கு உதவிகள் செய்வேன்

42) **ஆ) <u>மொழிபெயர்க்க.</u>**

**The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.**

பொன்னிற கதிரவன் தன் ஒளிக் கதிரால் இந்தப் பூமியைப் பொலிவு பெற எழுகின்றான். அழகிய காலை வேளையில் பால் போன்ற வெண்மை மேகங்கள் சூழ அந்த காட்சி பரவசத்தை உண்டாக்குது. வண்ணப் பறவைகள் காலை மெல்லிசையை ஒலித்துக் கொண்டே வலம் வர பட்டாம்பூச்சிகளும் பூக்களைச் சுற்றிவர, பூக்கள் தன் மணத்தை எல்லா இடங்களிலும் பரவச் செய்து, சுகந்தம் வீசின. காலை சில்லென உணர்வும், மணமும் பரவி எங்கும் இனிமையாக இருக்கிறது.

*பகுதி -5 (மதிப்பெண்கள் : 24)*

**<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:-</u>** **3×8=24**

43) **(அ) <u>தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை விவரித்து எழுது</u> . (அல்லது)**

***<u>தமிழின் சொல்வளம் :</u>***

- 1. சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும் தமிழ் மட்டும் அதில் தலை சிறந்ததாகும்.
- 2. திராவிட மொழிக்குடும்பத்தின் மூத்தமொழி தமிழ்.
- 3. தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள என்கிறார் கால்டுவெல்.

அரசினர் மேல்நிலைப் பள்ளி, சோழவரம், வேலூர்
www.Padasalai.Net

- 4. தமிழிலுள்ள ஒரு பொருள் குறித்த பல சொல் பிற திராவிட மொழிகளில் கூட இல்லை.
- 5. ஓர் எழுத்தே ஒரு சொல்லாக அமைவது தமிழ் மொழிக்கு உரிய சிறப்புகளில் ஒன்று.
- 6. தாவர இனத்தில் ஓர் இலையின் வளர்ச்சி நிலையைக் கொழுந்து - தளிர் - இலை - பழுப்பு - சருகு எனக் குறிப்பிடுகிறது.
- 7. தமிழ்மொழி ஆயிரத்தெண்ணூறு மொழிகளுக்கு வேர்ச் சொற்களையும், நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப் பெயர்களையும் தந்துள்ளது.
- 8. தமிழ் ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் தனித்து இயங்கும் ஆற்றல் உடையது. ஏனெனில் தமிழ்மொழி ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட வேர்ச் சொற்களைக் கொண்ட மொழி.

***புதிய சொல்லாக்கத்தின் தேவை*** :

- 1. தமிழ்மொழியில் நேரடியாக எழுதப்படும் நூல்களுக்கு இணையாக மொழிபெயர்ப்பு நூல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.
- 2. இந்திய மொழிகளிலிருந்து நேரடியாக இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- 3. ஆங்கிலத்தின் வழியாக உலகம் முழுவதும் உள்ள பல மொழிகளில் வெளிவந்த பல துறைகளைச் சார்ந்த நூல்களும் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன.
- 4. இத்தகைய அறிவு, பண்பாட்டுப் பரிவர்த்தனைகள் நீண்ட நெடுங்காலமாக நடக்கின்றன என்றாலும், தற்போதைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி அதை இன்னும் விரிவுபடுத்தியிருக்கிறது.
- 5. மொழிபெயர்ப்பின்போது, வெவ்வேறு பண்பாட்டுச் சூழலுக்கேற்பப் பொருத்தமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கும் மொழிபெயர்ப்பாளர் சரியான வார்த்தைகள் கிடைக்காத பட்சத்தில் புதிய வார்த்தைகளையும் சொற்சேர்க்கைகளையும் உருவாக்க வேண்டியிருக்கிறது.

43) **ஆ) கொடை தமிழரின் சிறந்த அறங்களுள் ஒன்று என்பதை உமது பாடத்தின் வழி நிறுவுக.**

**முன்னுரை** :
வீரத்தைப் போலவே கொடையும் தமிழ் மக்களால் விரும்பப்பட்ட ஒன்று தன்னலம் துறந்து பிறர்நலன் காண்பதே உண்மையான மகிழ்ச்சி.

**செல்வத்தின் பயன் ஈதலே** :
✓ நாம் செல்வம் பெற்றதன் பயன் யாதெனில் பிறருக்குக் கொடுத்து மகிழவேண்டும் என்று மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.
✓ "***செல்வத்தின் பயனே ஈதல்***" (புறம் 189:7-8)
✓ கொடைச் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது தமிழர்களின் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது.

**கொடைப் பெருமை** :
✓ ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன.
✓ கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது. பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது.
✓ பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது.
✓ வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்பட்டனர்.
✓ அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும், ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும், நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன.

**கொடை மாக்கள்** :
✓ உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார்.
✓ இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் பரணர்.
✓ பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார் பரணர்.
✓ தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார்.
✓ எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாராட்டுகிறார்.

**அக இலக்கியத்தில் ஈதல்** :
புற இலக்கியங்களில் மட்டுமன்றி அக இலக்கியங்களிலும் ஈதல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது.

அரசினர் மேல்நிலைப் பள்ளி, சோழபுரம், வேலூர்
www.Padasalai.Net

**முடிவுரை** :

வள்ளல்கள் மட்டுமன்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியம் பதிவு செய்துள்ளது. தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்திரனாரின் பேருள்ளம் புறநானூற்றில் புலப்படுத்தப்பட்டிருக்கிறது.

**44) அ.அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" என்னும் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.** (**அல்லது**)

**குறிப்புச் சட்டகம்**

முன்னுரை
குப்புசாமி
பக்கத்து வீட்டுக்காரர்
முடிவுரை

**முன்னுரை** :

கல்மனதையும் கரைய வைக்கும் கதை இந்த ஒருவன் இருக்கிறான். இதை இக்கட்டுரையில் காண்போம்.

**குப்புசாமி** :

✓ குப்புசாமி 25 வயது வாலிபன். வயிற்று வலிக்காரன்.
✓ உறவினர்கள் இவனை அனாதைப் போல நடத்தினார்கள்.
✓ காரணமில்லாமல் பக்கத்து வீட்டுக்காரரால் வெறுக்கப்பட்டான் குப்புசாமி.
✓ வயிற்றுவலிக்கு மருத்துவம் பார்க்க சென்னை வந்தவன் இந்த குப்புசாமி.

**பக்கத்து வீட்டுக்காரர்** :

✓ பக்கத்து வீட்டுக்காரர் காரணமில்லாமல் வெறுப்பை அவன் மீது காட்டியவர். அவரின் மனைவி கருணையோடு இருந்தவர்.

✓ குப்புசாமிக்கு ஆறுமுகம் மூலம் கடிதம் வந்தது. ஆறுமுகமும் தன் பங்காக இரு சாத்துகுடியும், ஒரு ரூபாய் பணமும் கொடுத்தார்.
✓ பக்கத்து வீட்டுக்காரர் குப்புசாமிக்கும் ஒருவன் இருக்கிறான் என்பதை வீரப்பனின் கடிதம் மூலம் அறிந்தார். கடன் வாங்கி கொடுத்த அந்த மூன்று ரூபாயும் அவரின் மனதை மாற்றியது.
✓ மனைவியை உடன் அழைத்துக்கொண்டு மருத்துவமனை செல்ல சாத்துக்குடி வாங்க சென்றார்.

**முடிவுரை** :

எல்லோருக்கும் ஒருவன் இருக்கிறான் யாரும் அனாதை இல்லை என்பதை இக்கட்டுரையின் மூலம் காணும் போது மனிதம் துளிர்க்கிறது என்பதனை அறிய முடிகிறது.

44) **ஆ**) "**கோபல்லபுரத்து மக்கள்**" **கதையில் உங்கள் மனம் கவர்ந்த கதாபாத்திரத்தைப் பற்றி விவரித்து எழுதுக**.

**குறிப்புச் சட்டகம்**

முன்னுரை
தேசாந்திரி
கருணை அன்னமய்யா
முடிவுரை

**முன்னுரை** :

பசியென்று வந்தவர்களுக்கு தன்னிடம் இருப்பதை கொடுத்து காக்கின்ற மனித நேயம் விருந்தோம்பல். இக்கட்டுரையில் கோபல்லபுரத்து மக்களின் விருந்தோம்பலைக் காணலாம்.

**தேசாந்திரி** :

✓ சுப்பையாவின் வயலில் அருகு எடுக்கும் பணி.
✓ அன்னமய்யாவுடன் ஒரு ஆள் உடன் வந்தான்.
✓ அவன் மிக சோர்வாக இருந்தான்.
✓ லாட சன்னியாசி போல உடை அணிந்து இருந்தான்.
✓ குடிக்க தண்ணீர் கேட்ட அவனுக்கு நீச்ச தண்ணீர் கொடுக்கப்பட்டது.
✓ வேப்பமர நிழலில் சோர்வாக அமர்ந்தான்.

**கருணை அன்னமய்யா** :

✓ அவன் பெயர் பரமேஸ்வரன் என்றும், தற்போது மணி என்றும் கூறினான்.
✓ அன்னமய்யா ஒரு உருண்டை கம்மஞ் சோற்றையும், துவையலும் வைத்து கொடுத்தார்.

www.Padasalai.Net ஆசிரியர் மேல்நிலைப் பள்ளி, சோளிங்கர் - வேலூர்

✓ கடுமையான பசியிலும் அரை உருண்டை சாப்பிட்டுவிட்டு கண்மூடி உறங்கினான்.

✓ ஆனந்த உறக்கம் கண்டான்.

**முடிவுரை** :

பசியென்று வந்தவர்களுக்கு தன்னிடம் இருப்பதை கொடுத்து காக்கின்ற கோபல்லபுரத்து மக்களின் விருந்தோம்பல் போற்றுதலுக்கு உரியது.

45) **அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**முன்னுரை - அரசுப்பொருட்காட்சி - அரங்குகள் - துறை விளக்கங்கள் - விற்பனை நிலையங்கள் - விளையாட்டு நிகழ்வுகள் - இலக்கியக் கூட்டங்கள் - மகிழ்ச்சி - முடிவுரை.** (**அல்லது**)

**குறிப்புச்சட்டகம்**

முன்னுரை
பொருட்காட்சி
நுழைவுச் சீட்டு
பல்துறை அரங்கம்
அங்காடிகள்
பொழுதுபோக்கு
முடிவுரை

**முன்னுரை** :

எங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப்பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வை இக்கட்டுரையில் காண்போம்.

**பொருட்காட்சி** :

✓ மக்கள் அதிகமாக கூடும் இடத்தில் பொருட்காட்சி நடைபெற்றது.

**நுழைவுச் சீட்டு** :

✓ பொருட்காட்சி நடைபெறும் இடத்தின் உள்ளே செல்ல நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டது. பெரியவர்களுக்கு 30 ரூபாயும், சிறுவர்களுக்கு 15 ரூபாயும் என நுழைவுச்சீட்டு நிர்ணயம் செய்யப்பட்டது.

**பல்துறை அரங்கம்** :

✓ அரசின் சாதனைகள் கூறும் பல்வேறு அரசுத்துறை அரங்கங்களும், தனியார் பொழுது போக்கு நிறுவனங்களும் நிறைய இருந்தன.

**அங்காடிகள்** :

✓ வீட்டு உபயோகப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் என பல்வேறு பொருட்களும் ஒரே இடத்தில் கிடைத்தன.

**பொழுதுபோக்கு** :

✓ சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாட பொம்மை அரங்கம் போன்ற பல்வேறு அரங்கங்களும்,இராட்டினங்களும் நிறைய இருந்தன.

**முடிவுரை** :

எங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வினை இக்கட்டுரையில் கண்டோம்.

45) **ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிமுறைகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வைத் தருவோம் - முடிவுரை.**

**தலைப்பு** : ***சாலை விதிகளைக் கடைபிடிப்போம் !***

**முன்னுரை** :

வாகனங்கள் ஓட்டிச் செல்லும் சாலையில் நடந்து செல்பவர்களும் சாலை விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். சாலை விதிகளைப் பின்பற்றாமல் நடப்பதனால் சாலை விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. சாலை விதிகளை எவ்வாறு பின்பற்றி நடக்க வேண்டும் என்பதைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

**சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு** :

*"நீதி மன்றங்களில் இன்னமும்*
*தேங்கி இருப்பதெல்லாம்...*
*விபத்து வழக்குகள் தான்...."*

- என்கிறார் கவிஞர் தமிழ் நிலா. சாலை என்பது விளையாட்டு மைதானமன்று. கவனமில்லாமல் வாகனங்களை ஓட்டுவது, வேகமாக வாகனங்களை ஓட்டுவது, அலைபேசி பயன்படுத்திக்கொண்டு வாகனங்களை இயக்குவது

அரசினர் மேல்நிலைப் பள்ளி, சோழவரம்-வேலூர்
www.Padasalai.Net

ஆகியவை விபத்தினை ஏற்படுத்தி மரணத்திற்கு வழிவகுக்கின்றன. சாலையைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தினால் விபத்திலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**சாலை விதிகள்** :

'அனுமதிக்கப்பட்ட திசையில் இல்லாமல் எதிர்திசையில் வாகனத்தைப் பின்னால் செலுத்தக் கூடாது. தடக் கோடுகள் இடப்பட்ட சாலைகளில், தடத்தின் உள்ளேயே வாகனத்தைச் செலுத்த வேண்டும். தடம் மாற நேர்ந்தால், மாறுவதற்கு முன்பு உரிய கை சைகைகள் (இண்டிகேட்டர்) காட்ட வேண்டும். சாலைச் சந்திப்பு, பாதசாரிகள் கடக்கும் இடம் போன்ற இடங்களை அணுகும்போது, சாலை மீது, 'நிறுத்தம்' என்ற அடையாளத்தைக் கண்டால், வாகனத்தை நிறுத்தக் கோட்டுக்கு முன்னால் வாகனத்தை நிறுத்த வேண்டும்.

**ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள்** :

" ***தலைக்கவசம் உயிர்க் கவசம்*** "

" *100 - **இல் போனால்** 108 **வரும்*** "

சாலையில் இடப்பக்கம் வண்டியை ஓட்ட வேண்டும். அடையாளப் பலகைகளை அறிந்து வாகனங்களை ஓட்ட வேண்டும். மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கை பட்டை அணியவேண்டும். தீயணைப்பு ஊர்திக்கும், பிணியாளர் ஊர்திக்கும் முன்னுரிமை தந்து வழிவிட வேண்டும்.

**விபத்துகளைத் தவிர்ப்போம்** :

உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டிருக்கும் சமீபத்திய அறிக்கை ஒன்று திடுக்கிடும் புள்ளிவிவரத்தைத் தருகிறது. 2006 - 2007 ஆம் ஆண்டுகளில் 178 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையிலான அறிக்கையின்படி, சுமார் 12 இலட்சத்துக்கும் அதிகமானோர் சாலை விபத்துகளில் ஆண்டுதோறும் மரணமடைவதாகத் தெரிகிறது. படுகாயமடைவோரின் எண்ணிக்கை இரண்டரை கோடிக்கும் அதிகம்.

**விழிப்புணர்வு தருவோம்** :

வளர்ந்த நாடுகளில் வாகனங்கள் அதிகமாக இருந்தாலும் இந்தியாவில் மட்டும் விபத்து அதிகமாக உள்ளது. ஜப்பான். சுவீடன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மிகக் குறைவாகவே சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே நாமும் சாலை விதிகளைப் பின்பற்றி விபத்து இல்லா இந்தியாவை உருவாக்குவோம்.

**முடிவுரை** :

சாலை விதிகளைக் கடைப்பிடிப்பதே காலத்திற்கும் நலம் பயக்கும்.

**<u>தயாரிப்பு</u>:**

**அரசு மேல்நிலைப் பள்ளி,**
**சோழவரம்,**
**வேலூர் மாவட்டம்.**

www.Padasalai.Net
அரசினர் மேல் நிலைப் பள்ளி, சோழவரம், வேலூர்

## மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண் : 1476

நாள் : 13-12-2023 வகுப்பும் பிரிவும் : 10 - அ

1. மாணவ / மாணவியின் பெயர் : கி. தமிழ்வேந்தன்
2. பிறந்த நாள் : 01-12-2008
3. தேசிய இனம் : இந்தியன்
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : கிள்ளிவளவன்
5. வீட்டு முகவரி : 45, மறைமலையோன் வீதி, முகில் நகர், திருவானைக்காவல், திருச்சி
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : 10-ம் வகுப்பு
7. பயின்ற மொழி : தமிழ்
8. பெற்ற மதிப்பெண்கள் : 450/500
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அரசு மேல்நிலைப் பள்ளி, சோழவரம், வேலூர்.

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| முழு ஆண்டு பொதுத் தேர்வு | 6314520 ஏப்ரல் - 2023 | தமிழ் | 90 |
| | | ஆங்கிலம் | 90 |
| | | கணிதம் | 90 |
| | | அறிவியல் | 90 |
| | | சமூக அறிவியல் | 90 |
| | | மொத்தம் | 450 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம்
11. தாய்மொழி : தமிழ்
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : $A_1$

கி. தமிழ்வேந்தன்

மாணவ / மாணவியின் கையெழுத்து